

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் 08.04.2025 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் தமிழ்நாடு பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சி.வி.எம்.பி.எழிலரசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு பெற்றோர்.ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் வி. முத்துக்குமார், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மாவட்டம் - மோகனூர் வட்டம் -ஆண்டாபுரத்தில் -

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப்.10-

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமம், தெற்குத் தெருவில் வசித்துவரும் திருமதி. இளஞ்சியம் (வயது 50) என்பவர் தனது மகன்வழிப் பேரன் சுஜித் (வயது 5) மற்றும் மகன்வழிப் பேத்தி ஐவிழி (வயது 3) ஆகிய மூவரும் (7.4.2025) அன்று பிற்பகல் 3.00 மணியளவில் தங்களது தோட்டத்திற்கு சென்றபோது, 6.4.2025 அன்று இரவு வீசிய பலத்த மழை மற்றும் காற்றினால் மின் கம்பிகள் சேதமடைந்து விவசாய நிலத்தில் இருந்த இரும்புக் கம்பி வேலி மீது விழுந்த நிலையில், அந்தக் கம்பிவேலியை மேற்படி மூவரும் தொட்டபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில் மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### எந்த பாரபட்சமும் இல்லை!

# சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை ஒளிபரப்பு!

## பேரவைத் தலைவர் - மு.அப்பாவு விரிவான விளக்கம்!

சென்னை,ஏப்.10-

சட்டப் பேரவை நிகழ்வுகள் நேரலை ஒளிபரப்பு செய்யப்படுவது குறித்து சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு பதிலளித்து, உரையாற்றிய பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், “நேரலை ஒளிபரப்பில் எந்த பாரபட்சமும் காட்டப்படுவதில்லை” என்று குறிப்பிட்டார்.

அது தொடர்பான விவாதம் வருமாறு:

**எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி**: சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஏற்கெனவே, ஒரு அறிவிப்பை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டிருக்கின்றீர்கள். கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகள் அவையிலே நேரலையில்

அத்துடன் உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருகின்ற பொழுது, அதனைப் பேசுவதும் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படும் என்ற அறிவிப்பை நீங்கள் வெளியிட்டீர்கள். அதன்படி எங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், 1-4-2025 அன்று

காவிரி- குண்டாறு இணைப்புத் திட்டம் குறித்து பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். (மணியடிக்கப்பெற்றது)

மேலும், 26-3-2025 அன்று எங்களுடைய உறுப்பினர் சகோதரர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி , திருச்செந்தூர் மற்றும் இராமேஸ்வரத்தில் கூட்ட நெரிசலில் இறந்தது குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இந்த இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் அவையில் பேசுகின்றபொழுது, எங்களுடைய உறுப்பினர்கள் பேசியதை அவை நேரடி ஒளிபரப்பு செய்யவில்லை.

**பேரவைத் தலைவர்**: நீங்கள் சொன்னது எல்லாமே தவறான தகவல். நீங்கள் சொன்னது, இதுவரை பேசியது எல்லாம் தவறானது. அதாவது நம்முடைய முதலமைச்சர் 2021 செப்டம்பர் 9 ஆம் தேதி முதல் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு என்னென்ன வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன என்பதைத் தேர்வு செய்து, அதன் அடிப்படையில் பல மாநிலங்களுக்கு அதிகாரிகளை அனுப்பி ஆய்வுசெய்து, எந்தெந்த மாநிலங்களில் எவ்வாறெல்லாம், ஒளிபரப்பு செய்யப்படுகிறது, அதனால் மக்கள் மத்தியில் என்ன தாக்கம் ஏற்படுகிறது, இந்தப் பிரச்சினை--, இங்கு தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தினால்கூட, அதனால் பிற பகுதிகளில் ஏதேனும் பிரச்சினை அல்லது தாக்கம் ஏற்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைத்து, முழுமையாக ஆய்வுசெய்த பின்னர், முதலமைச்சர் நேரடி ஒளிபரப்பாக கேள்வி நேரத்தை மட்டும் பயன்படுத்துவோம், காரணம் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு எழாது, எனவே, அதனைச் செய்வோம் என்ற அடிப்படையில் தொடர்ந்து கேள்வி நேரத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அதில் யாரும் இதுவரை, என்னைப் புறக்கணித்தார்கள் என்று சொல்லவில்லை. அது நடந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, முதலமைச்சர் 110 விதியின்கீழ் ஏதேனும் அறிவிப்பைக் கொண்டுவந்தால், அதன் அடிப்படையில் அது முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படும். மானியக் கோரிக்கைகளில் உறுப்பினர்கள் கேள்வி கேட்டு, அமைச்சர்கள் பதில் சொல்லும்பொழுது, முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போன்று, நம்முடைய உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கரோ அல்லது அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய உரையை மட்டும் நேரடி ஒளிபரப்பு செய்யாமல், பிற ஆளுங்கட்சி, தோழமைக் கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கின்ற, விதி 55-ன்கீழ் வந்ததை, நேரடி ஒளிபரப்பு செய்தது என்பது உண்மைக்குப் புறம்பான செய்தி. அப்படி யாருக்குமே செய்யவில்லை. அவ்வாறு ஒரு பதில் இருக்குமானால், நம்முடைய அமைச்சர்களுடைய பதில்கள் மட்டும், என்னுடைய கவனத்தைப் பெற்று, என்னுடைய அனுமதியைப் பெற்று, பதில்கள் மட்டும் தான் சென்றிருக்குமே தவிர, முழுமையாக நான் சொன்னதுதான் உண்மையான விஷயமே தவிர, இதைத் தாண்டி தவறான விஷயங்கள் எதையும் இங்கு செய்யவில்லை. நிச்சயமாக, இந்த அரசும் முதல்வர் அவர்களும் இதுகுறித்து மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். விரைவில், நிச்சயமாக அனைத்தையும் ஒளிபரப்பு செய்யவேண்டும் என்பது தான் முதல்வர் அவர்களுடைய எண்ணம். அதற்கு வேண்டிய, தேவையான ஏற்பாடுகள் செய்கின்றோம். இன்னும் உண்மையைச் சொல்லப்போனால், எல்லா உறுப்பினர்களுக்கும் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் சொல்லியிருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, ஓர் உறுப்பினர் ஏதேனும் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டால், நம்முடைய எதிர்க்கட்சி கொறடா அவர்களுக்குத் தெரியும். உறுப்பினர் அம்பேத்குமார் இந்த சபையில் ஒரு பிரச்சினையைப் பேசி, அது அவர்களுடைய கவனத்திற்கு வந்து, அமைச்சர் எ.வ. வேலு, எதிர்க் கட்சி கொறடா பேசி, நானும் அப்போது பேரவைத் துணைத் தலைவர் இருந்தார்கள். பேரவைத் தலைவர் வந்து முடிவு செய்தார்கள் என்ற பிறகு, அழைத்துப் பேசி, இந்தப் பதிவுகள் வெளியே போனால், எங்கள் பகுதியில் என்ன தாக்கம் ஏற்படும் என்று எதிர்க்கட்சி கொறடா சொன்னார்கள்.

அது நியாயமாக இருந்தது. ஆகவே, முழுமையாக அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டது. இந்த அவையில் பேசுகின்ற ஒரு உறுப்பினருடைய ஒரு வார்த்தை ஒரு சமூகத்திலே அமைதியையும், நன்மையையும் பயக்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். ஆகவேதான், நம்முடைய முதலமைச்சர் , பயிற்சி கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய நேரத்தை நாங்கள் அதற்கு வேண்டிய பயிற்சியை யாரை வைத்துக் கொடுப்பது எவ்வாறு கொடுப்பது என்பதையெல்லாம் நாங்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தோடு இருக்கின்றது. நிச்சயமாக இந்த அரசே ஏற்கெனவே, சொன்னதுபோல தேர்தல் அறிக்கையிலே நாங்கள் வந்தால் முழுமையாக ஒளிபரப்பு செய்வோம் என்று கூறப்படுகிறது. அதிலே மாறுபட்ட கருத்தை செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. Step by step ஆக செய்து கொண்டுதான் இருக்கிறோம். நீங்களே 4 வருடம் முடியவில்லை, இன்னும் 1 வருடம் இருக்கிறது. எடுத்துப் பார்க்க வேண்டியது தானே. (குறுக்கீடு)

**அவை முன்னவர் துரை முருகன்**: எதிர்க்கட்சித் தலைவர் கிளப்பிய ஒரு பிரச்சினைக்கு தாங்கள் விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள். இனியும் அப்படி நடந்திருந்தால்கூட சரி; நடக்காமல் இருந்தாலும் சரி; இனி அப்படி நடக்காமல் பார்த்துகொள்வது தங்களுடைய பொறுப்பு என்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட வேண்டுமென்று கெட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையில் தலைவர் சொல்வதுதான் தீர்ப்பு. காரணம் இவரைக் கேள்வி கேட்பதற்கு எந்த நீதிமன்றமும் கிடையாது. இதை பாண்டியனுடைய மொழியில் சொல்ல வேண்டுமானால், வானளாவிய அதிகாரம் தங்களுக்கு உண்டு. நான் என்ன கேட்கிறேன்; ஒரு பிரச்சினையை இப்படிதான் இதைக் காட்டலாம், காட்டக் கூடாது காட்டு என்று சொன்னால் அது தீர்ப்பு. போன முறை நாங்கள் குட்கா கொண்டு வந்து எங்கள் தலைவர் அதைக் காட்டினார்கள். அதன்மீது case போட்டு இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு போட்டிருக்கிறார்கள்.

குட்கா விஷயத்தைப் பற்றி சொன்னீர்கள். அது நீதிமன்றம் சென்று இங்கு வந்து அது முடித்து வைக்கப்பட்டது. அதை நம்முடைய மாமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்பதற்காக தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போல Agenda-விலிருந்து வந்த agenda-விலே அது சேர்க்கப்பட்டதென்றால் agenda-வில் இருப்பதை வாசிப்பதற்கோ, பேசுவதற்கோ அந்த அமைச்சர் அவர்களுக்கோ பதில் சொல்வதை நாம் காட்டியிருப்போம். அந்த ஒன்றுதான். அதனாலே, முழுமையாக அமைச்சர் அவர்களுடைய பதில் முழுமையாக இருக்கும். நான் இதிலே எந்த தவறான தகவலும் சொல்லவில்லை.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களே...

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே புதிய பாம்பன் பாலத்தை திறந்து வைத்து ரயில் போக்குவரத்தை தொடங்கி வைத்ததற்கு நன்றி. நன்றி என்பது தமிழர்களின் பாரம்பரிய பண்பாடு. ஆனால், பிரதமர் அவர்களே நீங்கள் அங்கு பேசிய உரையை நீங்களே ஒரு முறை கேட்டீர்களானால் இவ்வளவு தரம் தாழ்ந்தா பேசியிருக்கிறோம் என்று நீங்களே வெட்கப்படுவீர்கள். பிரதமர் பதவி என்பது இந்தியாவில் ஒரு கௌரவமான ஒரு உயர்ந்த பதவி. ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி, காந்தி, மொரார்ஜி தேசாய், ராஜீவ் காந்தி, வி பி சிங், நரசிம்மராவ், அடல் பிகாரி வாஜ்பாய் இப்படி பல பெரியவர்கள் அந்தப் பதவிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

நீங்கள் அந்த மேடையில் பேசும்போது உங்கள் சக அமைச்சர்கள் பெயரை மட்டும் சொல்லிவிட்டு உங்களை வரவேற்ற தமிழக அமைச்சர்கள் அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பெயரைக் கூட சொல்லாமல் தவிர்த்தீர்கள். எல்லா மதங்களும் இந்து மதம் உள்பட சகிப்புத்தன்மையை முதன்மைப்படுத்தி இருக்கிறது. பிரதமர் என்பவர் பாரபட்சமில்லாமல் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்பதுதான் பாரம்பரிய வரலாறு. உங்களைப் பொறுத்தவரை வரலாறு பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு குறைந்தபட்ச அக்கறை கூட இல்லாதவர் என்பதற்கு உதாரணம் உங்களின் அன்றைய மேடைப்பேச்சு உதாரணம்.

அழுகை அரசியல் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சுயமரியாதை இயக்கம். அது என்றுமே அநீதிகளை எதிர்த்து குரல் தருமே தவிர அதற்கு அழுகை அரசியல் எல்லாம் தெரியாது. பாராளுமன்றத்தில் திமுக மக்கள் பிரச்சினைகளுக்கு எப்படி எல்லாம் குரல் கொடுக்கிறார்கள், ஆதாரப்பூர்வத்துடன் ஆணித்தரமாக எப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்பதை நீங்கள் பாராளுமன்றத்திற்கு தினம் வருகின்ற சபாநாயகரை கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் பாராளுமன்றம் கூட உங்களுக்கு பொழுதுபோக்கு மன்றம் தான் எப்போதாவது வந்து வேடிக்கை பார்த்துவிட்டு போவீர்கள்.



எஸ். ரகுபதி
சட்ட அமைச்சர்

அந்த மேடையில் அது அரசு விழா என்றாலும், உங்கள் சக அமைச்சர் ஜெய் ஸ்ரீ ராம் என்று முழக்க மிட்டார்கள். நீங்களும் ராமநவமி என்று பெருமை பேசினீர்கள். ராமர் உண்மையா பொய்யா என்று விவாதத்திற்கு நாங்கள் வரவில்லை. ஆனால், ராமர் எல்லோரும் ஓர் குலம் என்று ஏற்றுக்கொண்டு தான் மீனவ வகுப்பை சேர்ந்த குகனை தன்னுடைய சகோதரராக பாவித்து குகனுடன் ஐவரானோம் என்று கம்பராமாயணத்தில் கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட குகன் சமுதாயமான மீனவர் சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தான் அவர்களுக்கு இலங்கை கடற்படையினால் ஏற்படும் அச்சுறுத்தலை நிறுத்துமாறு இலங்கை அதிபரை கேட்டுக்கொள்ளச் சொல்லி எங்கள் தளபதி உங்களுக்கு கடிதம் எழுதினார்.

ஆனால் அதைக் கூட நீங்கள் அரசியல், ஆக்க சில தலைவர்கள் தமிழில் கையெழுத்து போடாமல் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுகிறார்கள் தமிழ் கையெழுத்து போடுங்கள் என்று அறிவுரை என்ற பெயரில் ஏதோ சொல்கிறீர்கள். நீங்கள், நான் குஜராத்தி என்று பெருமையாக பேசுவீர்கள். ஆனால், நீங்கள் மேடையில் பேசுவது குஜராத்தி மொழியில் அல்ல, இந்தியில் தான். உங்களுடைய தாய்மொழி பற்றுக்கு இதை விட உதாரணம் தேவையில்லை நீங்களே கடிதங்களில் இந்தியில் தான் கையெழுத்து போடுகிறீர்கள், குஜராத்தி மொழியில் அல்ல. மொழி உணர்வு பற்றி எங்களுக்கு பாடம் எல்லாம் சொல்லித்தர தேவையில்லை.

முதல்வர் ஆங்கிலத்தில் கடிதம் எழுதினார். ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவது என்பது ஒரு மரபு. அரசாணைகள் தமிழில் இருக்க வேண்டும், அரசு ஊழியர்கள் தமிழில் கையெழுத்து போட வேண்டும், எல்லா அலுவலக முகப்பிலும் தமிழ் வாழ்க என்ற பெயர் பலகை வைக்க வேண்டும் என்றெல்லாம் எங்கள் தமிழ் உணர்வை எப்படி எல்லாம் வெளிப்படுத்தி இருக்கிறோம் என்பதற்கு உங்கள் சான்றிதழ் எல்லாம் எங்களுக்கு தேவையில்லை. திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்ததும் செய்த முதல் வேலையே சென்னை மாகாணத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றியது தான்.

மாநிலத்துக்கு மூன்று மடங்கு நிதி, ரயில்வேக்கு ஏழு மடங்கு அதிக நிதி என்று இங்கே வரும் எல்லா மத்திய அமைச்சர்களும் ஒரு கதையை அடித்து விடுவார்களே அதையே நீங்களும் வழக்கப்படி பேசிவிட்டு போய் விட்டீர்கள். ஆனால் இன்னும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை திறந்த பாடு இல்லை. ரயில்வே திட்டங்களைப் பற்றி பெருமை பேசும் பிரதமர் ரயில் நிலையங்களை போய் பார்த்தால் தெரியும் இன்னும் பணி நடந்து கொண்டே இருக்கிறது எப்போது முடியும் என்று தெரியவில்லை.

தமிழகத்தில் லட்சக்கணக்கான சிறு விவசாயிகள் பிரதமர் கிஷான் திட்டத்தில் ரூ. 12,000 கோடி பலன் பெறுகிறார்கள் என்று ஒரு புள்ளி விவரத்தை அடித்து விட்டிருக்கிறீர்கள். ஆனால் பிரதமர் அவர்களே விவசாயிகள் தங்கள் கோரிக்கைக்காக இன்றும் டெல்லியை நோக்கி பேரணி நடத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் பிரச்சனை இன்னும் தீரவில்லை. தளபதி விவசாயிகளுக்கு என்று தனி நிதிநிலை அறிக்கை என்று கரிசனம் காட்டி அவர்களை பாதுகாத்து வருகிறார். விவசாயிகளுக்கு மத்திய அரசு என்ன செய்தது என்பதை மாநிலங்கள் அவையில் ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் சொன்ன பதிலே ஆதாரம். மராட்டிய மாநிலத்தில் சென்ற முறை பா.ஜ.க. கூட்டணி ஆட்சி இப்போதும் அது தொடர்கிறது. மகாராஷ்டிராவின் மாராத்வாடா மாவட்டத்தில் மூன்று மாதத்தில் 16 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் 3090 விவசாயிகள் அந்த மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று விவசாய அமைச்சர் சிவராஜ் சௌகான் பதில் சொல்லி இருக்கிறார். மகாராஷ்டிராவில் இரட்டை எஞ்சின் ஆட்சி நடக்கிறது. அதாவது மத்தியிலும் சரி அந்த மாநிலத்திலும் சரி பா.ஜ.க. ஆட்சி அங்குதான் இந்த தற்கொலை. புள்ளி விவர புலிகளான நீங்கள் இது பற்றி கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள் ?

மருத்துவ படிப்பை தமிழில் கொண்டுவர வேண்டும் ஏற்கனவே உங்களது சகா அமித்ஷா சொன்னதை நீங்கள் தற்சமயம் வழி மொழிந்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் தமிழர்கள் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலம் மற்றும் பல்வேறு அண்டை நாட்டைச் சேர்ந்தவர்கள் படித்து வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் தரம் அந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்பது தான் காரணம். வட மாநிலங்களில் ஆரம்பக் கல்வியை கேள்விக்குறியாக இருக்கும்போது உண்மையில் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ள வடமாநில இளைஞர்கள் தேடி வருவது தமிழகம் தான். எனவே எப்போது தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்பதும், எங்கு எங்கு பயன்படுத்த வேண்டும் என்பது எல்லாம் எங்களுக்கு தெரியும். நீங்கள் எங்களுக்கு பாட நடத்த வேண்டாம்.

# ஆளுநரின் ஆணவத்திற்கு கிடைத்த அடி!

## ம.ஜ.க. தலைவர் மு.தமிமுன் அன்சாரி அறிக்கை!

சென்னை, ஏப்.10-

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிராக ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் நிழல் அரசாங்கத்தை நடத்த துடிப்பதற்கு இன்றைய தினம் உச்ச நீதிமன்ற வழங்கிய தீர்ப்பு முற்றுப் புள்ளி வைத்திருக்கிது.

தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் , ஆளுநர் நடத்தி வந்த நிழல் யுத்தத்துக்கு எதிராக தமிழ்நாடு அரசு கொடுத்த வழக்கில் இன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்றுச்சிறப்புமிக்கதாக உள்ளது.

ஆளுநர் நிறுத்தி வைத்திருந்த பத்து மசோதாக்களுக்கும் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கி இருப்பதை, நாடே வியப்போடு பார்க்கிறது.

ஒன்றிய ஃபாசிச பா.ஜ.க. கூட்டணி அரசு, தங்களுக்கு பிடிக்காத மாநில அரசுகளுக்கு இடையூறு செய்யும் வண்ணம் ஆளுநர்களை ஒரு கருவியாக பயன்படுத்தி வந்தது.

குறிப்பாக தமிழ்நாட்டில் சமூக நீதியை காக்கும் நோக்கோடு, செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசுக்கு இடையூறு செய்வதையே தனது செயல்பாடுகளாக வைத்திருந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி அவர்களின் ஜனநாயக விரோத போக்குக்கு இன்றைய தினம் உச்சநீதிமன்றத்தின் மூலமாக தீர்வு கிடைத்திருக்கிறது



இது ஒன்றிய அரசின் நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் இதர மாநிலங்களுக்கும் உதவும் வகையில் இருக்கிறது .

எப்போதுமே தமிழ்நாடு தான் இந்தியாவுக்கு பல அரசியல் மற்றும் அரசு நிர்வாக விஷயங்களில் வழி காட்டுகிறது.

இப்பொழுதும் தமிழ்நாடு தான் சட்டத்தின் துணைகொண்டு, நீதியை நிலைநாட்டியிருக்கிறது.

இந்த உறுதியான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களுக்கு மனித நேய ஜனநாயக கட்சியின் சார்பில் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். உச்ச நீதிமன்றத்தால் கண்டனத்திற்கு ஆளாகி இருக்கும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அல்லது ஒன்றிய அரசு அவரை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என மனிதநேய ஜனநாயகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.



ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வரவேற்று நெல்லை மத்திய மாவட்ட கழகம் சார்பில் வண்ணார்பேட்டையில் மைதீன் கான் தலைமையில் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.நிகழ்வில் லெட்சுமணன்,பேச்சிபாண்டியன் முருகன், சுரேஷ்,தர்மன்,கிரிஜா குமார்,பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், அண்ணாதுரை அருள்மணி,அன்பழகன், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டை யப்பன்,மீரான் மைதீன் தொப்பிமைதீன், முகமது அலி,கதிஜா இக்லாம் பாசிலா, மலைக்கண்ணன், சடாமுனி,துபாய் சாகுல், லெனின் வேல்முருகன், செல்வம், ஆனந்த், முத்து செல்வ மாரிமுத்து, எட்வர்ட் ஜான், சுந்தர் கந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.